# திருவாதவூரரும் சைவத்திருநெறியும்

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆய்வரங்கில்
சமர்ப்பித்த கட்டுரைகளின் தொகுப்பு

பதிப்பாசிரியர்கள்
திரு. க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
2015

நூலின் பெயர்:
திருவாதவூரரும் சைவத்திருநெறியும்

பதிப்பாசிரியர்கள்:
க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு: 2015

வெளியீடு:
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு - 04
இலங்கை

அச்சு:
'கௌரி அச்சகம்'
இல. 207, சேர் இரத்தினஜோதி
சரவணமுத்து மாவத்தை
கொழும்பு - 13
தொ.பே. 2432477

விலை : ரூபா 700/-

Title:
Thiruvaathavurarum Saivaththiruneriyum

Editors:
K. Raguparan
Dr. S. Pirashanthan

First Edition: 2015

Publish by
Dept. of Hindu Religious & Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo - 04
Sri Lanka

Printers:
Gowriy Printers
No. 207, Sir Rathnajothy
Sarawanamuththu Mawatha
Colombo - 13
Tel. 2432477

Price : Rs. 700/-

ISBN 978-955-9233-37-4

# மணிவாசகர் நோக்கில் ஆணவம்

சி. ரமணராஜா

## அறிமுகம்

தென்னாட்டிற்கே சிறப்புரிமையுடைய தத்துவ நெறியாகச் சைவசித்தாந்தம் விளங்குகின்றதென்பதனை ஆய்வறிஞர்கள் பலரும் நிலைநாட்டியுள்ளனர். சைவம் மிகத் தொன்மையுடைய நெறியாயினும் சைவத்தின் முடிவான தத்துவம் சோழர்காலப் பரப்பிலேயே முழுவடிவம் பெற்றிருந்தது. அத்தத்துவ சிந்தனைகள் காலங்காலமாக பல்வேறு அறிஞர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வந்த சிறப்பிற்குரியது. அவர்களின் படைப்புக்களே இதற்குத் தக்க சான்றுகளாகவும் அமைகின்றன. இந்தவகையில் சைவநாயன்மார்களின் அனுபவ வெளிப்பாடுகளாக சைவத்திருமுறை நூல்கள் சிறந்து விளங்குகின்றன. சைவத்தின் மூலநூல்களான வேதம், ஆகமம், இதிகாச மற்றும் புராண நூற்கருத்துக்களை உள்வாங்கிய சிறப்பு நிலையோடு சைவத் திருமுறைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தோத்திர நூல்கள் அனுபவ நிலையில் சுருங்கக் கூறிய விடயங்களை சாஸ்திர நூல்கள் அறிவு பூர்வமாகவும் தர்க்க ரீதியாகவும் சிந்தனை செய்து தெளிவாக விளக்கி நிற்கின்றன.

சைவத் தோத்திர நூல்களுள் எட்டாம் திருமுறையாக திருவாசகம், திருக்கோவையார் என்பன அமைந்திருக்கின்றன. இப்படைப்புக்களுக்கு உரிமைக் காரராக விளங்குபவர் மணிவாசகர். இவரது காலப்பரப்பில் சைவ சித்தாந்தம் முழுவடிவம் பெற்றிருக்கவில்லை. ஆயினும் சைவ சித்தாந்த சிந்தனைகள் வளர்ச்சியடைந்த சூழற்புலத்தில் அவர் வாழ்ந்திருக்கின்றார். இத்தன்மையினை மணிவாசகரின் வாழ்வியலூடாகவும், படைப்புகளூடாகவும் அவதானிக்க முடிகின்றது. இவரின் வாய்மொழிச் சான்றுகளான திருவாசகம், திருக்கோவையார் என்பன சைவசித்தாந்தம் பேசி நிற்கின்ற அடிப்படைக் கொள்கைகளான பதி, பசு, பாசம் என்கின்ற திரிபதார்த்தக்

கொள்கைகளையும், உயிர்களோடு இணைவாக கன்மம், மறுபிறப்பு, ஆன்மாவின் இறுதி இலக்கு, சாதனை மார்க்கங்களான சைவநாற்பாதங்கள், குரு, லிங்க, சங்கம வழிபாடுகள், சைவ ஆசார முறைமைகள், தீட்சை முறைகள், திருக்கோயில் வழிபாடு, திருவருளின் இன்றியமையாமை போன்ற பல அம்சங்களையும் தெளிவாக விளக்கி நிற்கும் சிறப்பிற்குரியன வாகும்.

உயிர்கள் பாசங்களால் பந்திக்கப்பட்டன. பாசத் தொடர்பு தான் உயிர் களின் பல்வேறு பிறவிகளுக்கு காரணமாகும். ஆதலின், அவற்றிலிருந்து விடுபடுதலே உயிர்களின் மேலான இலட்சியமுமாகும். இங்கு பாசங்களெனச் சுட்டப்படுவன ஆணவம், கன்மம், மாயை என்பன வாகும். ஆணவ மலமே ஏனைய இரு மலங்களின் செயற்பாட்டிற்கும் காரணமாக அமைகின்றது. மும்மலங்களுள் உயிருடன் அநாதித் தொடர்புடையதாகத் திகழ்வது ஆணவ மலமேயாகும். 'நான்' என்ற அகப்பற்றையும், 'எனது' என்ற புறப்பற்றையும் உண்டாக்குவது ஆணவமாகும். இதனை வடமொழியாளர் அகங்காரம், மமகாரம் எனக் குறிப்பிடுவர். தான் ஒன்றாயினும் பல சக்திகளையும், குணங்கள் பலவற்றையும் கொண்டு விளங்கும் ஆணவமலம் பற்றி, மணிவாசகர் நோக்கில் திருவாசகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### மணிவாசகர் வாழ்வும் – அருளனுபவ நிலைகளும்

நாயன்மார்கள் நால்வருள் மணிவாசகர் நான்காமவர். இவர், இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவனை செய்து பக்திப் பயணத்தில் மூழ்கித் திளைத்தவர். இறைவனை ஒரு நெறிய மனங்கொண்டு எவ்வாறு அகங்குழைந்து வழிபாடாற்ற வேண்டு மென்பதற்கு மாணிக்கவாசகரின் வாழ்வியல் முறைமையும், அவரது அருளனுபவ நிலைகளும் எடுத்துக் காட்டுகளாகும்.

மணிவாசகர் பாண்டி நாட்டில் மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர் எனும் திருத்தலத்திலே மானமங்கலத்தார் என்று அழைக்கப்படும் ஆமாத்தியர் குலத்திலே தோன்றியவர். இவர் திருவாதவூரர், ஆளுடைய அடிகள், கோவை வேந்தன், தென்னவன் பிரம்மராஜன் என்ற பல

பெயர்களால் அழைக்கப்படும் சிறப்பிற்குரியவர். இவரது வாழ்வு - வரலாறு என்பவற்றை அறிந்து கொள்வதற்கு அவரது படைப்புக்களான திருவாசகம், திருக்கோவையார் என்பன முதனிலைச் சான்றுகளாக அமைகின்றன. இவரது காலத்திற்குப் பிற்பட எழுந்த பெரும்பற்றப் பூலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம், கடவுள் மா முனிவரது திருவாதவூரடிகள் புராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் முதலியனவும், தல புராணங்கள் சிலவும் இவரின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு துணைநிலைச் சான்றுகளாக அமைகின்றன.

மணிவாசகர் அரிமர்த்தன பாண்டிய மன்னரின் அரசில் தலைமை அமைச்சராக பதவி வகித்திருந்தார். ஆயினும், அவரது சிறந்த அனுபூதி நிலையே சைவவரலாற்றில் அவருக்கு உயரிய இடத்தை வழங்கியது. இவர் ஆன்மீகஞானத்தின் அனுபவக் கோடுகளைத் தொட்டு நின்றவர். அவற்றின் கூறுகளை அனுபவ வாயிலாக தனது வாய்மொழிச் சான்றுகள் மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கின்றார். மணிவாசகரது வாழ்வையும் வரலாற்றையும் அவரது படைப்புகள் மூலமாக அறிய முடிகின்றது. இது பற்றி பேராசிரியர் நா. சுப்பிரமணியன் குறிப்பிடுமிடத்து,

> “அவர் கல்வியென்னும் பல்கடற் பிழைத்துத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக்கப்பெற்றவர். இச்சித்தம் அவருக்கு அனைத்து எலும்பு உள்நெருகும் ஆனந்தத் தேன் சுவையைத் தந்தது. இந்த அனுபவ நிலையிலேயே அவரது நெஞ்சக்கல் கனியாக நிலையான மாற்றம் எய்தியது. இம்மாற்றம் அவருக்கு அந்த மொன்றில்லாத ஆனந்தத்தை தருவதாயிற்று. அந்த ஆனந்தத்தில் மூழ்கி நின்று ‘அத்தன் எனக்கு அருளியவாறார் பெறுவார் அச்சோவே’ என ஆடிப்பாடித் திளைத்தவர் அவர்”[1]

என்று அவரது வாழ்வியலை சுருக்கமாக விளக்கிச் செல்கின்றார்.

பாண்டியமன்னனின் கட்டளையின்படி கடல் துறைப் பட்டினத்துக்கு குதிரைகள் வாங்குவதற்காகச் சென்றிருந்தமை, இடைவழியில் திருப் பெருந்துறையில் தங்கியிருந்தமை, அத்திருத்தலத்திலுள்ள குருந்தமர நிழலில் சிவனே குருவாக வந்து ஆட்கொண்டருளியமை ஆகிய இச் செயல்களே மணிவாசகரின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

பெயர்களால் அழைக்கப்படும் சிறப்பிற்குரியவர். இவரது வாழ்வு - வரலாறு என்பவற்றை அறிந்து கொள்வதற்கு அவரது படைப்புக்களான திருவாசகம், திருக்கோவையார் என்பன முதனிலைச் சான்றுகளாக அமைகின்றன. இவரது காலத்திற்குப் பிற்பட எழுந்த பெரும்பற்றப் பூலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணம், கடவுள் மா முனிவரது திருவாதவூரடிகள் புராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் முதலியனவும், தல புராணங்கள் சிலவும் இவரின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு துணைநிலைச் சான்றுகளாக அமைகின்றன.

மணிவாசகர் அரிமர்த்தன பாண்டிய மன்னரின் அரசில் தலைமை அமைச்சராக பதவி வகித்திருந்தார். ஆயினும், அவரது சிறந்த அனுபூதி நிலையே சைவவரலாற்றில் அவருக்கு உயரிய இடத்தை வழங்கியது. இவர் ஆன்மீகஞானத்தின் அனுபவக் கோடுகளைத் தொட்டு நின்றவர். அவற்றின் கூறுகளை அனுபவ வாயிலாக தனது வாய்மொழிச் சான்றுகள் மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கின்றார். மணிவாசகரது வாழ்வையும் வரலாற்றையும் அவரது படைப்புகள் மூலமாக அறிய முடிகின்றது. இது பற்றி பேராசிரியர் நூ. சுப்பிரமணியன் குறிப்பிடுமிடத்து,

> "அவர் கல்வியென்னும் பல்கடற் பிழைத்துத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக்கப்பெற்றவர். இச்சித்தம் அவருக்கு அனைத்து எலும்பு உள்நெருகும் ஆனந்தத் தேன் சுவையைத் தந்தது. இந்த அனுபவ நிலையிலேயே அவரது நெஞ்சக்கல் கனியாக நிலையான மாற்றம் எய்தியது. இம்மாற்றம் அவருக்கு அந்த மொன்றில்லாத ஆனந்தத்தை தருவதாயிற்று. அந்த ஆனந்தத்தில் மூழ்கி நின்று 'அத்தன் எனக்கு அருளியவாறார் பெறுவார் அச்சோவே' என ஆடிப்பாடித் திளைத்தவர் அவர்"[1]

என்று அவரது வாழ்வியலை சுருக்கமாக விளக்கிச் செல்கின்றார்.

பாண்டியமன்னனின் கட்டளையின்படி கடல் துறைப் பட்டினத்துக்கு குதிரைகள் வாங்குவதற்காகச் சென்றிருந்தமை, இடைவழியில் திருப் பெருந்துறையில் தங்கியிருந்தமை, அத்திருத்தலத்திலுள்ள குருந்தமர நிழலில் சிவனே குருவாக வந்து ஆட்கொண்டருளியமை ஆகிய இச் செயல்களே மணிவாசகரின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

இத்தகைய செயல்கள் அவரது பிற்கால அருளனுபவ நிலைகளுக்கும், அற்புதச் செயல்களுக்கும் பின்புலங்களாயின.

மணிவாசகர் சைவ உலகில் மேன்மை நிலையடைவதற்கு இருவேறு காரணங்களை முன்வைக்க முடிகின்றது.

அ. மணிவாசகரின் சைவ வாழ்வியல் முறைமைகளும், அருளனுபவ மற்றும் அருளற்புதச் செயற்பாடுகளும்.

ஆ. மணிவாசகரின் வாய்மொழி ஆக்கங்களான திருவாசகம், திருக் கோவையார்.

தேவாரமுதலிகள் மூவரின் அருளனுபவ நிலைகளில் நின்றும் மணிவாசகர் வேறுபடுகின்றார். அவரின் அருளனுபவ நிலை எளிதில் விளக்கிவிட முடியாத ஒன்றாகும். அவரது படைப்புக்களான திருவாசகம், திருக் கோவையார் ஆகியனவற்றை ஆழமாகவும் தெளிவாகவும் படிப்பார்க்கு இவ்வுண்மை புலப்படும். இவ்விலக்கியங்களில் சைவசித்தாந்த தத்துவ சிந்தனைகள், சைவவாழ்வியற் சிந்தனைகள், அறவியற் கருத்துகள், பக்தியியல் சிந்தனைகள், அறிவியற் சிந்தனைகள் முதலியன விரவிக் காணப்படுகின்றன.

இவற்றுள் திருவாசகம் பல்வேறு சிற்றிலக்கியங்களைத் தன் கட்டமைப் புக்குள் உள்வாங்கிய நிலையிலும், திருக்கோவையார் மரபு சார்ந்த ஒரு இலக்கியக் கட்டமைப்பைக் கொண்டதாகவும் அமைந்து காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியதாகும்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகரின் உணர்வு மற்றும் உணர்ச்சி நிலைகள் இருவேறு தளங்களில் வெளிப்பட்டுள்ளமையைக் கண்டுணர முடிகின்றது.[2]

அ. மணிவாசகர் தானாகவே நின்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வகையிலான தளநிலை. இத்தளம் சார் செயற்பாடுகளுக்கு திருச் சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலியன சான்றுகளாக அமைகின்றன.

ஆ. மணிவாசகர் சமூக மாந்தராக மாறி நின்று உரையாடல் மற்றும் நாடகப்பாங்கான உத்தி முறைகளுடாகத் தன்னை இனங்காட்டிக்

கொள்ளும் தளநிலை. இத்தளம் சார் செயற்பாடுகளுக்கு திருவெம் பாவை, திருவம்மானை முதலியன சான்றுகளாக அமைகின்றன.

## ஆணவம்

சைவசித்தாந்த ஆராய்ச்சிப் பாதையிலே பதி, பசு என்பவற்றை அடுத்து மூன்றாவது பொருளாக பாசம் விளங்குகின்றது. ஆன்மாக்களைப் பந்தித்திருப்பதனால் பாசம் எனப்படுகின்றது. பாசம் என்பது, கட்டுவதற்குரிய கயிற்றினையும், சேர்ப்பதற்குரிய பிசின் முதலியவற்றையும் குறித்து நிற்கின்ற வடசொல் ஆகும். அது 'பச்' எனும் முதனிலையில் பிறந்தது. 'பச்' என்பது கட்டு, சேர், பொருத்து என்ற பொருளைத் தருகின்றது. அறியாமை என்னும் பொருளையும் ஈண்டு அது குறித்து நிற்கின்றது.[3] பாசங்களானவை தளை, கட்டு, மலம், பந்தம் என வேறுபல பெயர்களாலும் சுட்டப்படுவதுண்டு. இவை அநாதியானவை. அறிவாக விளங்கும் சிவனும், அறிந்து கொள்கின்ற ஆற்றலுடைய உயிர்களும், உயிர்களைப் பந்தித்து நிற்கும் பாசங்களும் அநாதியானவை என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். உயிர்கள் பாசங்களால் பந்திக்கப்பட்ட இயல்புடையன ஆதலின் பசுக்கள் எனப்படுகின்றன. ஆணவம், கன்மம், மாயை என பாசங்கள் மூன்றாகும். திருமூலரும் பசுக்களைக் கட்டிய பாசங்கள் மூன்றுண்டு.[4] என்று குறிப்பிட்டிருக்கின்றார். பாசங்கள் நெல்லிற்கு முளையும், தவிடும், உமியும் போல நின்று, ஆன்மாக்களின் சுய அறிவினை மழுங்கடித்து உண்மை இயல்பினை உணராமல் செய்து விடுகின்றன.

*"மும்மல நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப் போல்*
*மம்மர் செய்தணுவினுண்மை வடிவினை மறைத்து நின்று"*[5]

என்று சிவஞான சித்தியார் எடுத்துக்காட்டியிருக்கின்றமை நோக்குதற் குரியது.

மும்மலங்களுள் முதன்மையானதும் ஆன்மாவுக்கு அநாதியிலேயே உண்டானதுமாக விளங்குவது ஆணவமலமேயாகும். இதன் உண்மை இயல்பு அனுமானப் பிரமாணத்தால் துணியப்படும். அதாவது பதி, பசு, பாசங்களின் தன்மை மறைக்கப்படுகின்ற படியால் அவற்றை மறைப் பதாகிய இருள் போன்ற ஒன்று இருத்தல் வேண்டுமென்பது அனுமானத்தால்

பெறப்படுகின்றது. இதுவே ஆணவம் எனப்படுகின்றது. உயிர்களின் இச்சை, அறிவு, செயல் ஆகியவற்றை ஆணவம் மறைத்து நிற்கின்றது. பிறவித் துன்பத்தை மறைத்து அதனை இன்பமாகக் காட்டி ஆன்மாவை அத் துன்பத்துக்குக் காரணமாகிய வினையிலே செலுத்துகின்றது. இக்கருத்தினை உமாபதி சிவாச்சாரியார்,

*"இருளானதன்றி இலதெவையும் ஏகப்*
*பொருளாகி நிற்கும் பொருள்"*[6]

என்று எடுத்தாள்கின்றார்.

ஆணவம் ஆன்மாவுக்கு அநாதியிலேயே உண்டானதாகையால் இதற்கு மூலமலம், சகசமலம், எனும் பெயர்களுண்டு. தவிர, அவித்தை, மலம், தமசு, மோகம், சடம், அஞ்ஞானம், பாசம், களங்கம், ஆவிருதி, ஆவரணம் என்ற பெயர்களும் வழங்கப்படுகின்றன. ஆணவம் அநாதியே உயிரோடுள்ளதும், உயிர்க்குயிராய் இறைவனைச் சார்ந்து இயங்காது ஆன்மாவையே சார்ந்தும், உயிரானது சிவனடியைச் சேரும் வரை உயிரோடு நீங்காது நிலைத்து நிற்கும் இயல்புமுடையது. இவ்வியல்பினை உமாபதி சிவாச்சாரியார்,

*"அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி*
*இன்றளவு நின்ற திருள்"*[7]

என விளக்குகின்றார். "ஒன்றதாய் அனேக சக்தியுடையதாய் உடனாய் ஆதி அன்றதாய்"[8] என சிவஞான சித்தியார் எடுத்துப் பேசும் வகையில், ஆணவ மலம் ஒன்றேயாயினும் தம்கால எல்லைகளின் மீளும் எண்ணரிய சக்திகள் அதற்குண்டு. நெல்லுக்கு உமி போலவும், செம்பினிற் களிம்பு போலவும் உயிருக்கு ஆணவ மலம் அமைந்துள்ளது. கண்ணை மறைத்திருக்கும் இருள் போல ஆணவம் உயிரின் அறிவினை மறைத்திருக்கும். ஆகவே ஆணவம் இருளைவிடக் கொடியது என்பது புலப்படுகின்றது.

உயிர்களிடத்தே "நான்", "எனது" எனும் செருக்கினை ஏற்படுத்துவது ஆணவமேயாகும். இதுவே ஆன்மாக்களின் துன்பத்திற்கு காரணமு மாகும். ஆணவம் என்ற ஒரு பொருள் இல்லையெனில் ஆன்மாவுக்கு பிறவித்துன்பம்

வருவதற்கு வாய்ப்பில்லை. என்பது சித்தாந்திகளது துணிபாகும். மேலும், ஆணவ மலத்திற்கு எண் வகைக் குணங்களுண்டு. அவை,

1. விகற்பம் - தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்.
2. கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்.
3. குரோதம் - கோபங் கொண்டு நினைத்தல்.
4. மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படல்.
5. கொலை - உயிர்களைக் கொல்லுதல்.
6. அஞர் - சந்ததமும் துக்கப்படல்.
7. மதம் - அகங்காரம் மேலிடுதல்.
8. நகை - சிரித்தல்

என்பனவாகும். இவற்றினால் இச்சைகள் பல உண்டாகி, அவற்றினால் பல்வேறு செயல்கள் விளையும். ஆகவே ஆணவமலமே கன்மத்துக்கு வித்து என்பது தெளிவாகின்றது.

## மணிவாசகர் நோக்கில் ஆணவமலம்

மணிவாசகர் நோக்கில் ஆணவமலம் பற்றி ஆராய்கின்ற போது,

அ. மணிவாசகரது வாழ்வியல் அனுவபம்

ஆ. அவரது படைப்புக்கள்

என்ற இருவேறுபட்ட தளங்களினூடாக நோக்க முடிகின்றது. இவ்வகையில் மணிவாசகரது நோக்கில் ஆணவ மலம் பற்றிய சிந்தனைகளைப் பின்வரும் வகையில் இனங்கண்டு விளக்கமுடிகின்றது.

- இறைவன் மலப்பீடிப்பு அற்றவன்[9].
- ஆன்மா மலங்களினால் பந்திக்கப்படும் இயல்புடையது.[10]
- மும்மலங்களுள் ஆணவம் முதன்மையானது, இருள் போன்றது.[11]
- அஞ்ஞானம் காட்டும் ஆணவம் ஆன்மாவோடு இயைந்து நிற்கும்.[12]

- ஆணவத்தொடர்பு தன்னையும் (ஆன்மா) இறைவனையும் அறிய விடாது மறைத்து வைத்திருக்கும்.[13]

- ஆணவத்தில் அழுந்தி அதனையே தானாகக் காணும் உயிர்க்கு, அதாவது ஆணவ இருளில் மூழ்கியிருப்போர்க்கு இறைவன் தோன்றாப் பொருளாவான்.[14]

- ஆணவத்தின் திண்மையை நெகிழ வைக்க இறைவன் திருவருள் கைகூடுதல் வேண்டும்.[15]

- அவனருளின்றேல் அவன் திருவடியை அடைய முடியாது. ஆணவம் நீங்கினாலன்றி அவனருள் கிட்டாது.[16]

- இறைவனின் இடையறா அன்பினால் மட்டுமே அவன் திருவடியைச் சென்றடைய முடியும்.[17]

- ஆணவத்தின் செயற்கைக் குணங்களான நான், எனது என்னும் செருக்குகள் நீங்கவே உயிர் தனது இயற்கையான அறிவினைப் பெற்றுக் கொள்கின்றது.[18]

- ஞானம் என்பது அறிவு. இதுவே வீடுபேற்றிற்கு வழி. அஞ்ஞானம் வீடுபேற்றிற்குத் தடையாகும்.[19]

- திருவருளே குருவடிவாக எழுந்தருளும். குருவின் உபதேசத்தின் மூலமே உயிர் ஆணவத்தை வெற்றி கொள்ளமுடியும்.[20]

- ஆன்மா அனுபவிக்கும் பல்வேறு பிறவிகளுக்கும் ஆணவ மலமே காரணமாக அமைகின்றது.[21]

- ஆணவத்தால் வருகின்ற பிறவிகளை அறுக்கும் ஆற்றல் இறைவனுக் கேயுண்டு.[22]

- உயிர் மீது கொண்ட கருணையினால் இறைவன் அவ்வுயிர் முன் தோன்றி சிறப்புக்கள் பலவற்றைச் செய்தருளி ஞானம் வரவைப்பான்.[23]

- பாசமென்னும் பற்றை அறுப்பவன் இறைவன் ஒருவனே.[24]

போன்ற சிந்தனைகளை மணிவாசகர் வாக்குகளால் தெரிந்து கொள்ள முடிகின்றது.

சைவசித்தாந்தக் கோட்பாட்டில் இறைவன் மலமற்றவராகச் சித்தரிக்கப் பட்டுள்ளார். மணிவாசகரும் இறைவனை, நிமலன், நிர்மலன், நிமலா, நின்மலா, நிமலனார் போன்ற சொற்றொடர்களால் குறிப்பிடுகின்றார். இவற்றைக் கொண்டு நோக்குமிடத்து ஆன்மாக்கள் இயல்பாகவே மலப்பீடிப்பு உடையன என்பதனையும், இறைவன் மலப்பீடிப்பு அற்றவன் என்பதனையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது. ஆன்மாக்களோடு ஆணவம் அநாதித் தொடர்புடையது. ஆன்மா ஆணவத்துடன் சேர்ந்து நிற்கும் போது அறிவு கெட்டு அசத்துப்பொருளாகவும், சிவஞானத்தைப் பெறும் போது முற்றறிவுடைய பொருளாகவும் விளங்கும் இயல்புடையது.

திருவாசகத்தில் ஓரிடத்திலாவது ஆணவம் என்ற சொல் மணிவாச கரால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கவில்லை. ஆயினும் ஆணவத்தைச்சுட்டி நிற்கின்ற பல்வேறு பெயர்கள் அவரால் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. அவலக்கடல், என்னுடைய இருள். அஞ்ஞானம், அறியாமை, மாய இருள், மும்மைமலம், மூலமலம், பொய் இருள், சித்தமலம், பந்தம். மயக்கம், பழமலம், மலம், பாசம் என்னும் சொற்கள் மணிவாசகரால் பல்வேறு இடங்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆணவ மலத்திற்கு விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்னும் எண்வகைக் குணங்களுண்டு. இக்குணங் களாலேயே ஆணவம் பல்வேறு செயல்களைப் புரிகின்றது. இவற்றுள் மோகமாகிய அவாவே உயிர்களை அதிகமாக அலைத்து நிற்பதுடன் அவை செய்யும் செயல்கள் பலவற்றுக்கும் காரணமாகின்றது. "அவாவெள்ளக் கள்வனேனை"[25], "ஆசையெல்லாம் அடியாரடியோம் எனும் அத்தனை யாகாதே"[26], "ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புதம் அறியேனே"[27], "சுருள்புரி கூழையர் சூழலிற்பட்டுன் திறம் மறந்திங்கு"[28], "நாட்டார் நகை செய்ய"[29], "இடையார் வெகுளி வலையில் அகப்பட்டுப் புன்கணனாய்ப் புரள்வேனை"[30] எனவும் அமைந்த பாடல்கள் ஆணவத்தின் குணங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மணிவாசகர் பல்வேறுபட்ட பிறவிகளைக் குறிப்பிட்டு அப்பிறவிகளை உயிர்கள் எடுத்து இளைப்படைவது ஏன்? என்பதனையும் தெளிவுபடுத்தி யுள்ளார். உயிர்கள் தாமாற்றிய வினைப்பயன்களுக்கு ஏற்பவே உடல்களை

எடுக்கின்றன. இத்தகைய உடல்களால் வினைகளை ஆற்றுகின்றன. வினைகளானவை நல்வினை, தீவினை என இரண்டு வகைப்படுகின்றன. ஆணவ மலத்தின் தொழிற்பாட்டினாலேயே உயிர்கள் மேற்கூறிய வினை களை அடைகின்றன. இத்தகைய வினைகளை உயிருக்கு ஊட்டுபவன் இறைவனே. மேலும் யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுபவனா கவும்[31], இறைவனுள்ளான். அதாவது யான் (நான்) என்றும் எனதென்றும் சொல்லிக் கூத்தாடும் படி செய்பவனாகியும் நிற்கின்றான். இச்சிந்தனை பற்றி "ஆட்டுவித்தால் ஆரொரு வராடாதாரே..."[32] என்று திருநாவுக்கரசர் கூறுவதும் நோக்குதற்குரியது. இவற்றை அனுபவித்து நிற்கும் போதுதான் உயிர்கள் ஆணவத்தின் திண்மையினை அறிந்துணரமுடியும்.

வினைகள் தொடர்ச்சியாக வருவதனால் அவை உயிரை மீள முடியாது கட்டிவைத்திருக்கின்றன. இதனாலேயே பிறந்தும், இறந்தும், மாறிமாறிப் பிறத்தலும், தொடரில் பிறத்தலும் உறுவது உயிரே ஆகும். இதனை "அச்சு மாறிப்பிறத்தல்" என சைவசித்தாந்தம் கூறுகின்றது. வினைகளுக்கு ஏற்பவே பிறவிகள் இடம்பெறுகின்றன. ஆணவத்தின் தொழிற்பாட்டினால் உயிர்கள் தொடர்ந்து வினைகளைப் புரியும். வினைகளைப் புரிவதனால் பிறவியும் பெருக்கிக் கொண்டே போகும். மணிவாசகரும் பல்வேறு பிறவிகளை எடுத்து அதனால் துன்பங்களை அனுபவித்து இளைத்தவனானேன். எனக் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். இதனை, "எல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தேன்"[33], "சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே"[34], "ஆணையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய் ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந்து எய்த்தேனை"[35], "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்"[36] என்ற வகையில் எடுத்துக் காட்டியிருப்பதனூடாக கண்டு கொள்ள முடிகின்றது.

அடுத்து, மணிவாசகர் வாழ்வியலினூடாக அ) பொய்ப்பொருள் ஆ) மெய்ப்பொருள் என இருவேறுபட்ட உலகியல் பொருட்கள் பற்றியும் அறிய முடிகின்றது. பொய்ப்பொருள் என்பது இலௌகீக போக நுகர்ச்சிப் பொருட் களாகும். இவற்றின் நிலைபேறானது அறியாமை என்னும் இருளால் உண்டுபண்ணப் பெறுகின்றது. அதாவது பொய்ப்பொருட்களை உண்மை யெனக் கொள்ள வைப்பதுவும், அவற்றை அனுபவித்து பல்வேறுபட்ட

துன்பங்களை வரவழைப்பதும் இந்த அறியாமையும், அதுசார்ந்த குணங் களுமேயாகும். இங்கு பொய்யான பொருட்கள் உண்டெனில் மெய்ப்பொருள் ஒன்றும் உளவாதல் வேண்டும் என அனுமானித்துக் கொள்ள முடிகின்றது.

பொய்ப்பொருளை அறியாமை உண்டுபண்ணுகின்றதெனில், அறியாமையை நீக்க வழி யாது? என்ற வினா எழுவது இயல்பாகின்றது. பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளிச்[37] செய்தவர் இறைவனே என்பது மணிவாசகரது அனுபவக் கூற்று. ஆதலின் இறைவன் பற்றிய அறிவினைப் பெறுதலே அல்லது இறை ஞானமே (மெய்ஞானம்) அறியாமை யைப் போக்கவல்லது. ஆகவே பொய்மையினை, மெய்யுணர்தல் ஊடாக நீக்க முடியுமென்பது புலனாகின்றது. இங்கு மெய்யுணர்தல் என்பது, பொய்ப்பொருளாகிய உடல் முதலியவற்றின் நிலையாமை கண்டு நீங்கி மெய்ப்பொருளாகிய கடவுளை அனுபவ வாயிலாக உணர்தல்[38] என்னும் பொருளுடையதாகும்.

யாக்கை, இளமை, செல்வம் முதலியவற்றின் நிலையில்லாத தன்மை யினை உண்மை அறிவினால் உணர்தல் வேண்டும். இவ்வுணர்தல் எனும் இயல்பு மேன்மைபெற அழிவில்லாததும் நிலை பேறுடையதுமான பொருளெது? என்ற தன்னுணர்வுச் சிந்தனையும் மேலெழும். மணிவாசகர் இந்த உணர்ச்சி மேலிடப் பெற்றவராகக் காணப்பட்டதனாலேயே,

"நானார்? என்னுள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்?
என்னை யார் அறிவார்? வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்?"[39]

என்று வெளிப்படுத்த அவரால் முடிந்தது. இறைவன் என்னை ஆண்டிருக் காவிட்டால் யான் எத்தகையவனாவேன்? என் உள்ளமும் அறிவும் எத்தகை யனவாகும்? என்னை அறிபவர் யாவர்? என்னையும் என் இயல்பினையும் இறைவன் குருவாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டமையினாலேயே யான் இன்னின்னவற்றையெல்லாம் எய்தினேன், என்று எடுத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எனவேதான், நிலையாமை பற்றிய உண்மை அறிவினால் தன்னை உணரவும், மெய்ப்பொருள் பற்றிய ஞானத்தைத் தேடவும் அவரால் முடிந்தது. ஆதலின் மெய்ப்பொருள் பற்றிய தேடலுக்கு சிவாகமங்களும், சித்தாந்த

நூல்களும் பயன்பாடுடையனவாகும். இம்முறையைப் பின்பற்றுவதன் மூலம் இறைஞானம் கிட்டும். இதனை அனுபவித்து உணர்த்தியவர் மணிவாசகர். இக்கருத்தினை கடவுள்மா முனிவர்,

*"பற்பல பொருளா யுள்ள பாசமும் அதனை மேவி*
*உற்பவ பேதமான, உடம்புயி ரொடுங்கு மாறும்*
*அற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாம்*
*தற்பர னடாத்தும்மாறும் உணர்ந்தனர் சைவநூலில்"*[40]

என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

மணிவாசகர் அறியாமையினால் இவ்வுலகியலில் அல்லற்பட்ட நிலையினை அனுபவ வாயிலாக எடுத்துக்காட்டுகின்றார். மாயா இயந்திரத் தனுவினுள் ஆன்மா[41] என்கிறது சிவஞான போதம். ஆன்மா மாயா காரியமாகிய உடம்பினை எடுத்து இவ்வுலகியலில் வாழ்கின்றது. வாழும் போது அறியாமையினால் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றது. இந்த யதார்த்த உண்மைகளை மணிவாசகர், "திறம் மறந்திங்கு இருள்புரி யாக்கையிலேகிடந்து எய்த்தனன்"[42] என்று வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்நிலையில், இறைவனின் இருப்பினை மறந்து இவ்வுலகிலே அறியாமையை வளர்க்கின்ற யாக்கை வலைக்குள்ளே அகப்பட்டுச் செயலற்றுக் கிடந்து இளைத்துப்போனவனாகிய நான் உன்னடியவனாவேன் என்றும் வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

'மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.[43] என்று சிவபுராணத்திலே மணிவாசகர் குறிப்பிடுகின்றார். இன்று கண்டு வீடுற்றேன், (பாசம் அற்றுப் போனதால் வீட்டின்பம் கிடைத்தது) எனக் கொள்ளுமிடத்து இதற்கு முன் காணமுடியாது போனதென்றே கொள்ள முடிகின்றது. அறியாமையாகிய ஆணவம் தொழிற்பட்டதன் காரணத்தினால் அறியப்பட வேண்டிய பொருளை அறிய முடியாது போனதெனலாம். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்கின்றார் நம்மாழ்வார். அருள் நந்தி சிவாச்சாரியாரும், 'அற்றது என்பாசம் உற்றது' உன்கழலே எனக் கூறுவதும் நோக்குதற்குரியது.

உற்றது (பெற்றது) ஒன்றுளதெனின் அற்றது (மறைந்தது) ஒன்றும் உளவாதல் வேண்டும். உற்றது வீடு (பேரின்பநிலை) எனின் அற்றது எது?

என்று ஆராயும் போது, மும்மலம் என்றே காணுதல் வேண்டும். தன்னைத் தன்னால் அறிதல் என்பது குருவின் வழிகாட்டலின்றி ஏற்படாது. குருவின்றிப் பாசஞானம், பசுஞானம், பதிஞானம் இதில் எதுவும் ஏற்படாது. ஆதலால் குருவருளால் என்னையும் கண்டேன். இறைவனையும் கண்டிருக்கின் றேன். இக்கண் அறிவே உன்திருவடியையும் காணவைத்தது. அதன் பயனாக வீட்டின்பத்தையும் அடைந்தேன். என்று காட்டுவதற்கு "மெய்யே, கண்டு இன்று வீடுற்றேன்" என்றார். ஆகவே அவனருளின்றேல் அவன் திருவடியை அடைய முடியாது. அதாவது ஆணவம் நீங்கினாலன்றி அவனருள் கிடையாதென்பதனை மணிவாசகர் தன் வாழ்வியலினூடாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

மணிவாசகர் 'எஞ்ஞானம் இல்லாதேன்'[44] என்று, இறைவன் தன்னை ஆட்கொள்வதற்கு முன்னர் எதுவித அறிவும் தனக்கிருக்க வில்லை என்ற தன்னனுபவத்தை, வெளிப்படுத்தியிருக்கின்றார். உயிர் சார்ந்ததன் வண்ண மானது, ஆகையால் அவ்வுயிர் உலகப் பொருட்களைச் சார்ந்தியங்கும் போது அது அசத்தாகவே இருக்கும். அறிய வேண்டிய பொருளை அறிந்து கொள்ளாது உலகியல் பொருட்களிடையே பற்றுவைத்துத் துன்பமடையும். ஆதலின், இறைவன் பற்றிய எந்தவிதமான ஞானமும் தனக்குக் கிடைக்க வில்லை என்று கூறியிருக்கலாம். ஆயினும் குருவாக வந்து உபதேசம் செய்தபின் எல்லா ஞானங்களும் கிடைக்கப் பெற்றனவெனவும், கூறுவதனூ டாக இறைவனை முன்னிறுத்துகின்றார். ஞானமின்மையே ஞானத்தை வரவழைத்திருக்கின்றது. இல்லாதது உள்ளதாகாது என்ற சிந்தனையின் மூலம் ஆன்மாவிடத்தே இயற்கையான அறிவு இருத்தல் வேண்டும். இது தொழிற்படாமைக்கு ஆணவமாகிய அறியாமை காரணமென்பது புலனாகின்றது. சிற்றறிவுடைய உயிர் தனது இயல்பான அறிவைப் பெறுவதோடு பேரறிவான பேரியல்பையும் அறிகின்றது. நான், எனது எனும் செருக்குகளான செயற்கை ஆணவ இயல்புகள் நீங்க உயிர் தனது இயற்கையான அறிவைப் பெறுகின்றது. அத்தகையதான இயற்கை அறிவு தலைப்படும் பட்சத்தில் பக்குவ நிலை ஏற்படுகின்றது. இதனையே 'அஞ்ஞானம், தன்னை அகல்விக்கும் நல்லறிவே'[45] என்கின்றார் மணிவாசகர்.

மெய்ஞானத்தின் மறு எல்லையே அஞ்ஞானம். ஆணவத்தின் குணம் இதுவாகும். அஞ்ஞானம் என்பது அறியாமை எனவும் பொருள்படும். யாதொன்றினையும் இதுதான் என்று பகுத்தறியும் தன்மையினை அறவே கொண்டிராத நிலையே அஞ்ஞான நிலை ஆகும். இந்த அஞ்ஞான நிலை உயிர்க்கு எவ்வாறு வந்ததெனில், பிறவிகள் தோறும் எம்மைப் பின்தொடர்ந்து வரும் ஆணவத்தின் காரணத்தினாலேயே ஆகும். இச் சிந்தனையை

*நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து*
*நான் எனது எனும் மாய*
*கடித்த வாயிலே நின்று முன்வினைமிகக்*
*கழறிய திரிவேனை......*[46]

எடுத்தாண்டிருக்கக் காணலாம்.

மேலும், சிவபுராணத்திலே "வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருள்"[47] என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம். இயல்பாகவே ஆணவ மலத்தினால் பந்திக்கப்பட்டிருத்தலின் தம்மை "வல்வினையேன்" என்றார். இதனையே பிறிதோரிடத்தில் "வல்வினையேன் ஆழியப் பாவுடையாய்"[48] என்று கூறியிருக்கின்றார். ஒருவர் தன்னால் ஆற்றப்பட்ட வினைகளைத் தானே அனுபவிக்க வேண்டும். மணிவாசகர் ஒரு சகலான்மா. அவர் இந்தப் பிறவியிலே பிரார்த்துவ வினைகளை அனுப வித்தவர். ஆகையால் அவ்வினையால் வரும் உடல், உயிர்த் துன்பங்களை நன்கு அறிந்தவராகின்றார். அதனால் அவ்வினையை "வல்வினையேன்" என்று குறிப்பிட்டிருக்கின்றார் எனக் கருதமுடியும்.

அறிவு சிறிதும் விளங்கப் பெறாது முழுமையும் மூடிக்கொண்டு உடனிருக்கின்ற வஞ்சகக் குணமுடைய ஆணவ இருளையே மணிவாசகர், "மறைந்திட மூடிய மாய இருள்" என்கின்றார். முன்செய்த வினை பின்தொடர்வதற்கு உயிர் அநாதியே பற்றியிருக்கும் ஆணவமே காரணம் என்றும் விளக்குகின்றார்.

இந்த ஆணவம் உயிரின் உண்மை அறிவை, இயல்பான அறிவை மூடி மறைத்து உயிரினைத் தன் வயப்படுத்தித் தன்னுடைய கட்டுக்குள் வைத்திருக்கின்றது. தனது வியாபகத்துக்குள், விரிவினுள் அடக்கி வைத் திருக்கின்றது. உயிர் ஆணவத்தின் வியாபகமாக அதனுள் அடங்கி

அஞ்ஞான இருளில் மூழ்கிவிடுகின்றது. அவ்வாறு அது மூழ்கி விடுவதனால் அதனையே "மூடிய" எனும் சொல்கொண்டு காட்டப்படுகின்றது. ஆணவம் தன் வியாபகத்தால் உயிரை மூடிநிற்கின்றது.[49] இக்கருத்தினை உமாபதி சிவாச்சாரியார்,

*ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்*
*இருபொருளும் காட்டாது இது*[50]

என்று எடுத்துக் காட்டுகின்றார். இதற்கு உரைவகுத்த சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், இருளானது தன்னைக் காட்டும் இயல்புடைய தாயினும் ஏனைய பொருட்களை மறைத்து நிற்கும் இயல்புடையது. ஆணவமானது தன்னையும் காட்டாது பிறபொருட்களையும் காட்டாது மறைத்து நிற்கின்றது. ஆதலின் இருளை விடக் கொடியது[51] என்று விளக்கம் தருகின்றார்.

ஆணவமாகிய இருளை ஒளிப்பொருள் ஒன்றினாலேயே நீக்க முடியும். இதன் மூலமாகவே ஆணவமெனும் இருள்கட்டு நீங்கும். இருள் கெடுக்கும் சுடர் இறைவன் என்று காட்டுவதற்காகவே இறைவனை மெய்ச்சுடர், மலர்ச்சுடர் என்று மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். "பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே"[52], "சுடரார் அருளால் இருள் நீங்கச் சோதி நீ"[53], "மூலமலமாகிய மும்மல மறுக்கும் தூய மேனிச் சுடர்விடு சோதி"[54], "மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்"[55], "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே"[56], என்றவாறு எடுத்துக்காட்டி, மேற்போந்த கருத்தினை விளக்கியிருக்கக் காணலாம்.

அஞ்ஞான இருளை அறுப்பவன், அவிழ்ப்பவன், நீக்குபவன் இறைவனே ஆவார். ஆன்மாக்களின் பக்குவ நிலை அறிந்து குருவடிவமாக மானிட உருவத்தோடு வந்து அந்த உயிர் செய்த வினைகளையெல்லாம் அகற்றி விடுபவரும் அவரே. இறையருள் முன்னிற்க ஆணவ இருள் மறைகின்றது. அதனால் உயிர்கள் தமது உண்மை நிலையையும், இறைவன் இயல்பையும் உணர்கின்றன. அஞ்ஞானமாகிய ஆணவத்தையும், மாயையையும் நீக்கி அருளியவன் இறைவன் என்று கண்டுகொள்கின்றது. எனவே ஆணவமாகிய குற்றத்தை உயிரினின்றும் நீக்கியவர் இறைவனே என்பதும், அந்த அறிவு மெய்யறிவு என்பதனையும் உயிர்களுணர்கின்றன. இந்த மெய்ஞான வருகைக்கு குரு உபதேசமும், அவர் வழங்கிய தீட்சை

களுமே காரணங்களென்பதனையும் அவை உணர்ந்து கொள்கின்றன. இதுவே மணிவாசகரின் அனுபவ நிலை. சிவன் அருளின்றி ஆணவ இருள் கட்டை நீக்க முடியாது என்பது அவரது மெய்க்கூற்றாகும். இதனைப் பல்வேறு இடங்களிலும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். ஆயினும் சில சான்றுகளை இங்கே குறிப்பிடலாம். "பந்தம் அறுத்தென்னை ஆண்டு கொண்ட பாண்டிப் பிரான்"[57], "என் பிறவியை வேரறுப்பவனே"[58], "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட,"[59], "பந்த மறுத்து எனை ஆண்டு"[60], "பாசமெனும் தாழ் உருவி"[61], "மும்மை மலம் அறுவித்த முதலாய முதல்வன்"[62], "பாசவேர் அறுக்கும் பழம்பொருள்"[63], "கடிய வினையகற்றி பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும் பதமே"[64], "இருள் கெட அருளும் இறைவா போற்றி"[65], "மலம் அறுத்து வான்கருணை தந்தானை"[66], "பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான்"[67], "பல்லோரும் காண என் தன் பசு பாசம் அறுத் தானை"[68], "பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத் தெனை யாண்ட"[69], "சுற்றிய சுற்றத் தொடர்பு அறுப்பான் தொல் புகழே பற்றி இப்பாசத்தைப் பற்றற நாம் பற்றுவான்"[70] என்றவாறாக அவர் வெளிப்படுத்தியதிலிருந்து இறையருளே, ஆணவமாகிய அஞ்ஞானத்தை அகற்றும் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு தன்னுடைய அனுபவத்தினூடாக ஏனைய ஆன்மாக் களையும் இறைவனை நோக்கி மணிவாசகர் ஆற்றுப்படுத்தியதனூடாகவும் இதனை மேலும் விளங்கிக் கொள்ள முடிகின்றது. மணிவாசகரின், "பத்தர்காள் இங்கே வம்மின் நீர் உங்கள் பாசந் தீரப்பணிமினோ"[71] என்ற சிந்தனை, யாம் பெற்றவை இவ்வுலகமும் பெறவேண்டுமெனும் பற்றற்ற உயர் விழுமிய சிந்தனையாக வெளிப்பட்டு நிற்கக் காணலாம்.

## தொகுப்புரை

மணிவாசகர் ஒரு பக்திக் கவிஞன், பெரும் தமிழ்ப் புலவர், சைவசித்தாந்த சிந்தனாவாதி, கருத்துச் செறிவுடைய பக்தி இலக்கியப் படைப்பாளி, இறைவனைத் தனக்கும் எமக்கும் நெருக்கமாக்கிய பக்திப் புரட்சியாளர், உயர்ந்த அனுபூதிமான், சிறந்த அறிவியலாளர் என்ற பல்தள நெறிகளில் மணிவாசகரை அணுக முடிகின்றது. சாஸ்திர நூல்களில் மணிவாசகரின் தாக்கம் பரவலாக இனங்காணப்படுகின்றது. சைவசித்தாந்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்களை, சைவசித்தாந்த தத்துவம் முழுவடிவம்

பெறமுன்னர் பங்களிப்புச் செய்தவர்கள், முழுவடிவம் பெற்றதன் பின்னர் பங்களிப்புச் செய்தவர்கள் என்ற வகையில் நோக்குகின்ற போது, முதலாம் வகையில் பங்களிப்பு நல்கியவர்களில் மணிவாசகரும் குறிப்பிடத்தக்க ஒருவர் என்பதனை மறுதலிக்க முடியாது. இவர் சைவசித்தாந்தம் பேசி நிற்கின்ற திரிபதார்த்தக் கொள்கைகளை மிகத் தெளிவாக அனுபூதி நிலையில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஆணவம், என்ற சொல் மணிவாசகரினால் ஓரிடத்திலாவது பயன் படுத்தப்படவில்லை. ஆயினும் அதனைக் குறித்து நிற்கின்ற சொற்கள் பல இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஆணவத்தின் பல்வேறான குணங்கள் அவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவை ஆன்மாக்களை வினைகளாற்றத் தூண்டுகின்றன, பல்வேறு பிறவிகளுக்குக் காரணமாக அமைகின்றன, உலகியலில் அனுபவிக்கும் துன்பங்களுக்கு மூலங்களா கின்றன என்ற விடயங்கள் விளக்கப் பட்டுள்ளன. உட்பகை ஆறும் ஆணவத்தின் ஆற்றலால் அதன்வழி நிற்கும் உயிரின் உள்ளத்தின் கட்தோன்றுவனவாயினும், அவை தோன்றுவதற்கு கருவியாய் அவ்வுயி ரோடு உடன் நின்று உதவுவது மாயையே என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆணவம் இறையருளால் மட்டுமே நீங்கும். இறைவன் குருவடிவில் வந்து மேற்கொள்ளும் உபதேசத்தினாலே ஞானம் கிடைக்கும். ஆணவம் நீங்கினாலன்றி இறைவனை எக்காலமும் அடைய முடியாது என்ற பல சிந்தனைகளை மணிவாசகர் அகநிலை, புறவெளிப்பாடு என்ற தளங்களிலே நின்று வெளிப்படுத்தியிருக்கின்றமை காணத்தக்கதாகும்.

## அடிக் குறிப்புகள்

1. சுப்பிரமணியன்.நா. (2002), நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப்பகம், கண்ணதாசன் சாலை, சென்னை, பக்.172 - 173.
2. மேலது, ப.182.
3. நவநீதகிருஷ்ண பாரதியார்.க.சு, (உரையாசிரியர்), (1954), திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை. ப.49.
4. திருமந்திரம் - 2367.
5. சிவஞானசித்தியார் - சுபக்கம். பாடல் - 176.

6. திருவருட்பயன் - குறள். 3 - 2.

7. மேலது - குறள். 3 - 4.

8. சிவஞானசித்தியார் - சுபக்கம். பாடல் - 170.

9. திருவாசகத்தில் சிவன், நிர்மலா, நின்மலன், நிமலன், நிர்மலன், நிமலா என அமைந்த சொற்கள் இதனை வெளிப்படுத்துகின்றன.

10. சுற்றிய சுற்றத் தொடர்பு ...... என அமைந்த திருஅம்மானைப் பாடல் பார்க்க.

11. கீர்த்தித் திருவகவல் 111 - 112.

12. அடைக்கலப்பத்து - 5.

13. சிவபுராணம் அடி.51.

14. முந்தை ஆன காலம் நின்னை எய் திடாத மூர்க்கனானேன் (திருச்சத - 7), ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒழியானே (சிவபுராணம் - அடி.68) எனவரும் திருவாசக பாடல் மூலம் அறிக.

15. திருவேசறவு - 10.

16. சிவபெருமான் தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான் (திருவேசறவு - 10) அவனருளாலே அவன்தாள் வணங்கி (சிவபுராணம் - அடி.18) தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் - (திருவெம் - 13).

17. இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே - (திருச்சதகம் - 11), இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் (சிவபுராணம் - அடி.2) சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால் (சிவபுராணம் - அடி - 17) உண்மையும் இன்மையுமாய் (திருச்சதகம் - 24) அன்பர்க்கு மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை (திருவம்மானை) சோதியனே துன்னிருளே (சிவபுரா - அடி 72), என்றவாறு மெய்யன்புடையார் அகக் காட்சிக்கு புலப்படுதலின் உள்பொருளாகவும் அவ்வன்பிலார்க்கு எவ்வாற்றானும் புலப்படாமையின் இல்பொருளாகவும் விளங்குவார்.

18. அற்புதப்பத்து - 3.

19. சிவபுராணம் - அடி.40.

20. கோகழி மேவிய கோவே போற்றி - (போற்றித் திரு.157), அருமறைகள் தானருளி (திருப்பூவல்லி - 13), என்னை ஆர் அறிவார் வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல். (திருக்கோத்தும்பி - 2), கோகழியாண்ட குருமணிதன் - (சிவபுராணம் - அடி.3) அறைகூவியாட் கொண்டருளி (திருவண்ட - 148),

உருநாமறியவோர் அந்தணனாயாண்டு கொண்டான் (தெள்ளோ - 1) அந்தணனாவதுங் காட்டி வந்தாண்டாய் (திருப்பள்ளி - 8), நிலந்தன் மேல்வந்தருளி (சிவபுராணம் - 59).

21. இப்பிறவியாட்கொண்டு இனிப்பிறவாமை காத்து (திருஅம்மானை - 12), ஆர்த்த பிறவித்துயர், (திருவெம்.12), சிவபுராணம் (அடி. 26 - 29).

22. நின்திருவருளால் என் பிறவியை வேரறுப்பவனே, மண்ணார்ந்த பிறவி அறுத்திட்டு அருள்பவன் நீ, பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான், என் பிறப்பறுத்த இணையிலியை என்ற பாடல்களின் வழியறிக.

23. கோத்தும்பி. பக்.2.

24. இத்தகைய சிந்தனைகள் மணிவாசகரது படைப்புக்களில் பல்வேறு இடங்களிலும் விளங்கிக் கொள்ள முடிகின்றது. ஆயின் படைப்புக்கள் வழி உற்று நோக்கி அறிக.

25. திருச்சதகம் பாடல் - 24.

26. திருப்படையாட்சி - 8.

27. அற்புதப் பத்து - 8.

28. அடைக்கலப்பத்து - 5.

29. திருஅம்மானை - 5.

30. அடைக்கலப் பத்து - 7.

31. திருச்சதகம் - 15.

32. திருநாவுக்கரசர் தேவாரம் 309: 3.

33. சிவபுராணம் - அடி.31.

34. நீத்தல் விண்ணப்பம் - 1.

35. திருஅம்மானை - 14.

36. திருவெம்பாவை - 12.

37. சிவபுராணம் அடி.37.

38. கதிரேசச் செட்டியார், மு. உரையாசியர், (1947), திருவாசகம் - திருச்சதகம் பேருரை, ரிப்பன் பிரசுரம், இராமச் சந்திரபுரம் புதுக்கோட்டைத் தனியரசு. ப.6.

39. திருக்கோத்தும்பி - 2.

40. திருவாதவூரடிகள் புராணம். மந்திரிச் சருக்கம் - செ.19.

41. சிவஞான போதம். மூன்றாம் சூத்திரம்.

42. அடைக்கலப்பத்து - 5.

43. சிவபுராணம் அடி.35.

44. சிவபுராணம். அடி.39.

45. சிவபுராணம் அடி.10.

46. அற்புதப்பத்து - 3.

47. சிவபுராணம். அடி. 50 - 51.

48. அடைக்கலப்பத்து - 6.

49. பொன்னையா.ஆ. (உரையாசிரியர்), (2003), சிவபுராணம் தெளிபொருள் விரிவுரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. ப.123.

50. திருவருட்பயன் குறள். 3 - 3.

51. சிவபாதசுந்தரம், சு. (உரையாசிரியர்), (2001), திருவருட்பயன் விளக்க உரையுடன், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை. பக். 37 - 38.

52. கோயிற்றிருப்பதிகம் - 3.

53. பிரார்த்தனைப் பத்து - 7.

54. கீர்த்தித் திருவகவல் 111 - 112.

55. சிவபுராணம் - அடி.38.

56. சிவபுராணம் - அடி.62.

57. திருப்பூவல்லி - 2.

58. அடைக்கலப் பத்து - 2.

59. அச்சோப்பதிகம் - 1.

60. மேலது - 6.

61. மேலது - 7.

62. மேலது - 9.

63. பிடித்த பத்து - 7.

64. திருப்பாண்டிப் பதிகம் - 8.

65. போற்றித்திருவகவல் - 169.

66. கண்டபத்து - .9

67. திருச்சதகம் - 16.

68. கண்ட பத்து - 4.

69. குயில்பத்து - 09.

70. திருஅம்மானை - 20.

71. சென்னிப் பத்து - 10.

## உசாத்துணை நூல்கள்


1. சுப்பிரமணியன், நூ. (2002), நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப்பகம், கண்ணதாசன் சாலை, சென்னை.

2. சித்தாந்த சாஸ்திரம் பதினான்கு மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, (1994), சைவ சித்தாந்தப் பெருமன்றம்4, வெங்கடேச அக்கிரகாரம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4.

3. கதிரேசச் செட்டியார், மு, (உரையாசியர்), (1947), திருவாசகம் - திருச்சதகம் பேருரை, ரிப்பன் பிரசுரம், இராமச் சந்திரபுரம், புதுக்கோட்டைத் தனியரசு.

4. அருளம்பலவனார். சு, (உரையாசிரியர்), (1967), திருவாசக ஆராய்ச்சியுரை, முதலாம் பாகம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

5. சிவபாதசுந்தரம், சு., (உரையாசிரியர்), (2001), திருவருட்பயன் விளக்க உரையுடன், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை.

6. பொன்னையா, ஆ, (உரையாசிரியர்), (2003), சிவபுராணம் தெளிபொருள் விரிவுரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

7. சுப்பிரமணிய பிள்ளை, கா., (உரையாசிரியர்), திருவாசகம், மூலமும், உரையும் (1997) டிசெம்பர், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.